திருமதி சு. குப்பம்மாள் : தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 80 கொடுத்து வரப்படுகிறது. போளூருக்கு அடுத்தாற் போல் 65 வீடுகள் சாம்பலானதற்கு மறுநாளே நாங்களும், தாசில்தாரும் சென்று ரூ. 80 வீதம் கொடுத்து ஆறுதல் சொல்லி விட்டு வந்தோம். ஆனால் அவர்கள் வீடுகட்ட மானியமாகக் கேட்டார்கள். நாங்கள் கடனாக வாங்கித் தருகிறோம் என்று கூறி யிருக்கிறோம். கடனைக் கேட்டதற்கு அதிகாரிகள் கவனிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே ரூ. 300 என்பதை ரூ. 500 ஆக கடனைக் கொடுத்து அவர்களை ஆதரிக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் ஏற்கனவே சொன்னேன். அம்மையார் அவர்கள் கூறுவதிலிருந்தே எவ்வளவு துரிதமாக இது விநியோகிக்கப்படுகிறது என்பது தெளிவாகிறது. கடன் கொடுப்பதில் சில விதிமுறைகள் இருக்கின்றன. ஹரிஜனங்களாக இருந்தால் அவர்களுக்கு உத்தரவாதப் பத்திரம் தேவைப் படுகிறது. மற்றவர்களுக்கு ரூ. 300 கடன் கொடுப்பதென்றால் ரூ. 600 அளவிற்கு செக்யூரிட்டி கொடுக்க வேண்டியிருப்பதால் இப்படி நிலை இருக்கிறது. இருந்தபோதிலும் எவ்வளவு தூரம் விரைவுபடுத்தவேண்டுமோ அந்த அளவிற்குத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 34, 35 ஒத்திவைக்கப்படுகின்றன.

தாழ்த்தப்பட்டோர் நல கூட்டு நெறியாளர் பதவி

*** 36 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்டோர் நல நெறியாளர் அலுவலகத்தில் கூட்டு நெறியாளர் (Joint Director) பதவி ஒன்று இருந்தது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டுவரை அப்பதவி இருந்தது ?

(உ) எப்போது எடுக்கப்பட்டது ? அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 5—6—1967 வரை.

(உ) பணி இடத்தை நிரப்பாமல் செய்யப்பட்டதேயன்றி எடுத்துவிடவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தாழ்த்தப்பட்டோர் நல நெறியாளர் அலுவலகத்தில் கூட்டு நெறியாளர் இருந்த காலத்தில் ஒருவர் அலுவலகத்தைக் கவனித்துக் கொள்ளவும் இன்னொருவர் வெளி மாவட்டங்களுக்குச் சென்று அங்குள்ள அலுவலகங்கள், விடுதிகள், பள்ளிகள் போன்றவற்றினைக் கண்காணிக்கவும் முடிந்தது. ஆகவே, இந்தக் கூட்டு நெறியாளர் பதவியை வைத்துக் கொள்ள அரசு மறு பரிசீலனை செய்ய முன்வருமா ?

1968 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த நெறியாளரின் பணி அவசியம் என்பதை உணர்ந்துதான் அதை அடியோடு எடுத்து விடவில்லை. தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் அதை ஐ.ஏ.எஸ். காடரில் போடுவதை விட டி.ஆர்.ஓ. தகுதி பெற்ற ஒரு அதிகாரியைப் போடுவதற்கு அரசு உத்தேசித்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பதவி இருக்க வேண்டுமென்று விரும்பித்தான் அதை அடியோடு ரத்து செய்யவில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : இந்த நெறியாளரை நியமிப்பதற்கு முன்னதாக கல்வி முறையையும், ஹாஸ்டல்களையும் மட்டும் நேரடியாகக் கண்காணிப்பதற்குத் தனியாக அவரை நியமிக்க அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : துணை நெறியாளர் ஹரிஜன நல இலாகாவின் எல்லாத் திட்டங்களைத் தான் கண்காணித்து வருகிறார். கல்வியில் அதிக சிரத்தையோடு கவனிக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு இருக்கிறது. அந்தப் பதவியில் யாரையும் நியமிக்கவில்லை யென்பதால் இந்த இடர்பாடு ஏற்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, whereas the workload that is cast upon the Director of Harijan Welfare is enormously increasing nowadays because of a large number of applications coming to his office, will the Government think of the possibility of appointing a Joint Director specially to deal with Backward Classes and Most Backward Classes and leave the Director of Harijan Welfare to deal with the affairs concerning Harijan boys?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இயக்குநர் அவர்கள் இலாகாவின் முழுப்பொறுப்பையும் ஏற்று நடத்தி வருகிறார். அவருக்குத் துணையாக இருக்கும் வகையில்தான் இந்த அதிகாரி பணியாற்றி வந்திருக்கிறார். இப்போது அவர் பணியாற்றவில்லை. அது மிகமிக அவசியம் என்பதை கருத்தில் வைத்துத்தான் வேறு ஒரு அதிகாரி நியமிக்கப்பட வேண்டுமென்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது. விரைவில் அந்த அதிகாரி நியமிக்கப்படுவார். உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் அத்துறையில் வேலைப்பளு அதிகமாகியிருப்பதை உணர்ந்து மேலும் அதிகாரிகள் நியமிப்பதற்குக்கூட அரசு பரிசிலனை செய்து கொண்டு வருகிறது.

திரு. என். மருதாசலம் : கோவையில் ஜில்லா உணவு சப்ளை ஆபீசர் அவர்கள் ஹரிஜன வெல்பேர் ஆபீசராகவும் இருந்து வருகிறார். இந்த இரண்டு வேலைகளையும் அவர் பார்க்க வேண்டியிருப்பதால் வேலைகளில் தடை ஏற்படுகிறது. ஆகவே ஹரிஜன வெல்பேர் ஆபீசர் என்று தனியாகப் போட அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவர் இரண்டு வேலையையும் பார்த்து வரவில்லை.

திரு. எம். சுரேந்திரன்: கிராமங்களில் உள்ள ஹரிஜனச் சேரிகள் பலயிடங்களில் மோசமாகயிருக்கின்றன. வீட்டு வசதி, குடி தண்ணீர் வசதி இவையெல்லாம் சரிபெற நடைபெறுவதில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி, தாழ்த்தப் பட்டோர் நல கூட்டு நெறியாளர் பதவிபற்றியது. அதைப்பற்றிக் கேளுங்கள்.

(உறுப்பினர் வினா கேட்கவில்லை.)

விதவைகளுக்குப் பள்ளி

* 37 வினா.—**திருமதி வி. ப. பழனியம்மாள்:** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்டத்திலும், விதவைகளுக்கென்று ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்க அரசாங்கம் ஆவன செய்யும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை.

திருமதி வி. ப. பழனியம்மாள்: ஒவ்வொரு மாவட்டத்திலும் இளம் விதவைகளுக்கு பள்ளிப்படிப்பும், மற்றவர்களுக்கு வயதிற் கேற்றவாறு தொழில் கல்வியும் கற்றுக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்போது கோவை, சேலம், மதுரை, திருச்சி போன்ற இடங்களில் சேவை இல்லங்கள் என்ற இல்லங்கள் நடைபெறுகின்றன. அந்த இல்லங்களில் விதவைகள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். தனியாக விதவைகளுக்கு எந்த இல்லமும் அரசாங்கம் துவக்க உத்தேசமில்லை.

திரு. கரு. சீமைச்சாமி: இளம் பெண்கள் விதவைகளாகி விடுகிறார்கள். அவர்களுக்கு மறுமணம் செய்வதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ? சில சமூகங்களில் கணவனை இழந்து விட்டால் விதவைகளாக காலத்தை கடத்தி விட வேண்டியிருக்கிறது. அப்படிக் கடத்தி விடுகிறார்கள். சில ஜாதிகளில் மறுமணம் செய்து கொள்கிறார்கள். அதுமாதிரி செய்ய ஏதாவது ஏற்பாடு உண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் அவர்கள் இந்த சமூக சீர்திருத்தக் கருத்தை சமூகத்தில் பரப்புவாரானால் அது மிக வெற்றிகரமாக முடியும் என்று கருதுகிறேன்.

கூட்டுறவு நாணய சங்கங்கள்

* 38 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—